**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் மாதவரம்**

**OS.07./2020**

இந்நீதிமன்றத்தால் சத்திய பிரமாணம் செய்விக்கபட்டு சாட்சியின் வாக்குமூலம் 02.09.2022 -ம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

பெயர் - பழனிசாமி வயது 74

தந்தை பெயர் - முத்துகருப்பு தேவர் இனம் -

கிராமம்

வட்டம்

வ.சா.1

**வாதி தரப்பு சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 4வது பிரதிவாதி தரப்பில் செய்யப்படும் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் தற்போது வரை தாவாவை திருத்தம் செய்யவோ நீதிமன்ற கட்டணத்தை சரியாக கட்டவோ நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். நான் பிரமாண வாக்குமூலத்தில் சொன்ன சங்கதிகள் ஆவணங்கள் அடிப்படையில் தான் தெரியும் என்றால் சரிதான். தாவாவை மனுதாரர் என்ன பரிகாரத்திற்கு கேட்டார் என்றால் சொத்து எங்களுடையது என்று கேட்டுள்ளோம். மற்றபடி எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரிதான். சொத்து தற்போது பழனிசாமியின் பெயரில் உள்ளது. 2015ம் வருடம் இந்த பத்திரம் பதியப்பட்டது.அதற்கு முன்பு கிரய ஒப்பந்தம் நடந்ததா என்றால் ஆமாம் 2013ம் வருடம் ஒப்பந்தம் நடந்தது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் எனக்கும் வாதிக்கும் போடப்பட்ட கிரயஒப்பந்த பத்திரம் ஆகும்.அது எ.ம.சா . 2 ஆகும்.(வாதிதரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனைக்குட்பட்டு குறீயீடு செய்யப்படுகிறது.) . நான் வாதியிடம் செய்த கிரய ஒப்பந்தம் மற்றும் கிரய பத்திரம் சங்கதிகளை வாதி தாக்கல் செய்த தாவாவில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.அது தேவையில்லை என்று விட்டுவிட்டோம்.16.08.2019ம் வருடம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் அன்றைய தினம் வாதிதான் இந்த வழக்கு சொத்திற்கு உரிமையாளர் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போது தாவா சொத்தை கிரயம் செய்து அதை மறைத்து இந்நீதிமன்றத்தில் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.இந்த நீதிமன்றத்திற்கு வழக்கு சொத்தை எனக்கு விற்ற விவரம் தெரியவரும் என்பதால் தான் என்னுடைய எ .ம.சா. 1 அதிகார பத்திரத்தில் அடிக்கபட்டுள்ளது என்றால் சரியல்ல. எ.மா. சா 1 மற்றும் 2 ஒரே தேதியில் கையொப்பம் இடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் எ.மா. சா. 2 ல் 16.07.2012 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

அதேபோல் எ.ம. ச.ஆ . 1லிலும் 16.07.2012 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.இரண்டும் ஒரே நாளில் தான் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தின் அசல் ஆவணம் யாரிடம் உள்ளது என்று எனக்கு தெரியாது. ம.சா.ஆ. 6 ன் அசல் ஆவணம் யாரிடம் உள்ளது என்றால் அது என்னிடம் தான் உள்ளது. நீதிமன்றத்தில் மனு செய்து அசல் ஆவணங்களை வாங்கி கொண்டு இதுநாள் வரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் என்னிடம் கேட்கவில்லை. ம.சா.ஆ6 யாரால் பெறப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. எந்த தேதியில் பெறப்பட்டது என்று எனக்கு நியாபகம் இல்லை. எந்த தேதியில் பெறப்பட்டது என்று வாதி என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் 3 மற்றும் 4 எந்த தேதியில் தாவா சொத்தை கிரயம்பெற்ற விவரம் வாதிக்கு தெரியவந்தது என்ற விவரம் என்னிடம் சொல்லவில்லை.ம.சா.ஆ 6 இந்த வழக்கிற்காக தயார் செய்யபட்ட ஆவணம் என்றால் சரியல்ல. அதனால் இந்த வழக்கில் கோரியுள்ள 1வது பரிகாரம் நிலைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. அதே போல் ம.சா.ஆ 1, 2, 3 , 5 ஆகிய ஆவணங்கள் யாரால் எப்போது பெறப்பட்ட விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. வில்லங்க சான்றை பார்த்து தெரிந்துகொண்டேன். அந்த வில்லங்க சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். அந்த ஆவணம் தான் ம.சா.ஆ 6 என்றால் சரிதான். எந்த தேதியில் இருந்து எந்த தேதிவரை வில்லங்கம் பார்த்தீர்கள் என்றால் நிணைவில்லை. மசா.ஆ. 1,2,மற்றும் 3 ஆவணங்களில் சான்றிட்ட நகலில் முரளிதரன் என்ற பெயர் யார் என்று எனக்கு தெரியாது. அதேபோல் அந்த ஆவணங்கள் யாரால் எந்த தேதியில் பெறப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. அதேபோல் மசாஆ. 4 ஆவணத்தை பற்றியும் எனக்கு எதுவும் தெரியாது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கபடுகிறது.**